செ.வெ.எண்: 93 நாள்:17.02.2018

திருநெல்வேலி பாளையங்கோட்டை எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியில் பள்ளி கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு கல்வி கடன் வழங்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

----

திருநெல்வேலி பாளையங்கோட்டை எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியில் பள்ளி கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு கல்வி கடன் வழங்கும் முகாம் இன்று (17.02.2018) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மாண, மாணவிகளுக்கு கடன் விண்ணப்ப படிவங்களை வழங்கி முகாமினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தமிழக அரசு ஏழை, எளிய மாணவ, மாணவியர்கள் சிறப்பாக கல்வி பயில பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. மாணவ, மாணவிகளின் உயர் கல்வி கற்க பொருளாதார ரீதியாக தடை ஏற்படாத வகையில் வங்கிகளின் மூலம் கல்வி கடன் வழங்கப்பட்டு வருகிறது. 2016 -17 ம் கல்வியாண்டில் 12 ம் வகுப்பு முடித்து உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் கல்வி கடன் பெறுவதில் உள்ள சிரமத்தை போக்க பள்ளி கல்வித்துறையின் சார்பில் சிறப்பு கடன் வழங்கும் முகாம் நடத்தப்படுகிறது. இதை மாணவ, மாணவிகள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும். மாணவ, மாணவிகள் சிறப்பாக கல்வி பயின்று சிறந்த பணிகளுக்கு சென்று கல்வி கடன்களை திரும்ப செலுத்த வேண்டும். அப்போது தான் தொடர்ந்து அடுத்து வரும் மாணவ, மாணவிகளுக்கும் வங்கிகள் கல்வி கடன் வழங்க ஏதுவாக இருக்கும். இங்கு பல்வேறு வங்கிகளின் அலுவலர்கள் வந்து உள்ளனர். கல்வி கடன் பெறுவது குறித்து மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். என பேசினார்.

இம்முகாமில் 16 கல்லூரி மாணவ, மாணவிகளிடம் ரூ.51.70 லட்சம் கல்வி கடனுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

இம்முகாமில் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், முன்னோடி வங்கி மேலாளர் திரு. கஜேந்திரநாதன், பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ், மாவட்ட கல்வி அலுவலர்கள் (சேரன்மகாதேவி) திரு.ஜெயராஜ், (தென்காசி) திருமதி.ரதிபாய், (திருநெல்வேலி) திரு.சின்னத்துரை, மற்றும் வங்கி அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.